# குளித்தலை நகராட்சி

31.12.2018.ஆம் தேதி திங்கட்க்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் டிசம்பர்–2018.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர்–2018.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும்துப்புரவு பணிகளை தனியார் மயமாக்குதலின் திட்டத்தின்மூலம் தனியார் நிறுவனங்களை நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2, நாள்–26.10.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்–23.11.2016 படியும், இந்நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறை ந.கஎண.2773/2017/எச்1–ன்படி 02.01.2018.ஆம் தேதிமுதல் ரிலையன் ஃபெசிலிட்டி சர்விஸ் நிறுவனத்தின்மூலம் துப்புரவு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காணும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் 31.12.2018.ல் முடிவடைகிறது. எனவே, இப்பணியை மேலும் ஓராண்டிற்கு மேறக்ணும் 2 அரசு பள்ளிகளிலும் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் பொது சுகாதார அவசர அவசியம் முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரவும், பணி மேற்கொள்ளும்வரை ஏற்கனவே பணிபார்த்துவரும் ரிலையன் ஃபெசிலிட்டி சர்விஸ் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.5.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஒப்படைக்கும்பரை ஏற்கனவே பணிபார்ர்த்துவரும் ரிலையன்ஸ் ஃபெசிலிட்டி சர்விஸ் நிறுவனத்தின்மூலம் பணி மேற்கொள்ளவும், இச்செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4128/2018/எச்1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி பகுதி கல்மண்டப பிரிவு வாய்க்கால் பகுதியில் தடுப்புசுவர் கட்டுதல் பணிக்கு ரூ.4.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 16.10.2018 தேதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/3585/2018.ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மன்ற தீர்மானம் எண்.229, நாள்.30.11.2018.ல் அனுமதி பெற்று 21.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி கல்மண்டப பிரிவு வாய்க்கால் பகுதியில் தடுப்பு சுவர் கட்டுதல் | 1). திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை. | 0.04 % குறைவு |
| | | 2). R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 0.58 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.04 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.செந்தில்குமார் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2466/2018/இ1)

..2..

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்து வருகின்றனர். மேலும் 52 தனியார் துப்புரவு பணியாளர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட 52 தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு 2018–2019 வருட தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு எண்.இ1/544/2018, நாள்–21.06.2018.ன்படி நாள் ஒன்றுக்கு தொகை ரூ.340/–யை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). 52 தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கலாம். இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மற்றும் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சியின் சத்தியமங்கலம் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அகற்ற பணி மேற்கொள்ள உள்ளது. எனவே, அப்பகுதியில் உள்ள குப்பைகளை (Legacy Waste) கன்டூர் சர்வே (Contour Survey) மேலாய்வு செய்து அளவீடுகள் அறிக்கை பெறவும், பட்டியல் வழங்குமுன் சான்று பெறவும், இயக்குநர், அண்ணா யுனிவர்சிட்டி, சென்னை–25 அவர்களுக்கு ரூ.1,77,000/– கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.3340/2018/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க.எண்.38162/பி3/2014–3, நாள்–22.01.2015.ல் அனுமதி அளிக்கப்பட்டு, 01.08.2015.ல் ரிலையன் ஃபெசிலிட்டி சர்விஸ் பிரைவேட் லிமிட்., சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு, தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக துப்புரவு பணி செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் 31.07.2018 முடிவடைந்துள்ளது. 01.8.2018 முதல், மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணி செய்ய, மன்ற தீர்மானம் எண்.64, நாள்–28.03.2018.ல் அனுமதிக்கப்பட்டதன்பேரில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பு இவ்வலுவலக ந.க.எண்.1242/2018/எச்1, நாள்–11.06.2018 மூலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் பரிந்துரை செய்து, ந.க.எண்.2392/2018/அ4, நாள்–13.06.2018.ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடர் நினைவூட்டுகளும் அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜே3, நாள்–04.12.2018 செயல்முறைகளில், 3 ஆண்டுகளுக்கு 52 நபர்களை தனியார் துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதி உத்தரவு வழங்கியுள்ளார்கள். ஆகவே, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரவும், தனியார்வசம் துப்புரவு பணிகள் ஒப்படைக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). ஒப்பந்தப்புள்ளி கோரும் செலவினத்திற்கும், 52 நபர்களுக்கான துப்புரவு பணிக்கான செலவினத்தினை பொது நிதி மற்றும் திட்டநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

*****

**குளித்தலை நகராட்சி**

31.12.2018.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 239 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 240 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 241 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 242 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 243 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 244 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 245 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/— அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.